# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள்–08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | வைகாசி - 27 | 10-06-2003 | செவ்வாய்க்கிழமை | ஓசை 112







# டோக்கியோ மாநாடு குறித்து புலிகளுக்கு விளக்க ஜப்பான், நோர்வே குழுக்கள் வன்னி வரும்

## சமாதான முயற்சிகளை முன்னெடுப்பது குறித்தும் பேசுவர்

**ஜப்பான் மற்றும் நோர்வே நாடுகளின் குழுக்கள் வன்னிக்கு வருகைதந்து விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களைச் சந்திக்கவுள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. இக்குழுக்கள் ஜப்பான் மாநாட்டில் நடைபெற்ற விடயங்கள் குறித்து புலிகளுக்கு விளக்கவுள்ளதாகத் தெரியவருகிறது.**

நேற்று டோக்கியோவில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் புலிகள் கலந்து கொள்ளாததையடுத்து அங்கு நடைபெற்ற விடயங்கள் குறித்து விளக்கிக் கூற ஜப்பான், நோர்வே குழுக்கள் வன்னிக்கு வருகை தரவுள்ளன.

முதலில் அடுத்த வாரம் ஜப்பானியக் குழு வன்னிக்கு வருகை தரவுள்ளது. இதனையடுத்து நோர்வேக்குழு வருகை தரவுள்ளதாகவும் இக்குழுக்கள் தற்போது ஸ்தம்பித நிலையிலுள்ள சமாதான நடவடிக்கைகளை நகர்த்திச் செல்வதற்கான முயற்சிகளிலும் ஈடுபடவுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## டோக்கியோ மாநாடு குறித்து பீரிஸ் இந்தியாவிற்கு விளக்குவார்

டோக்கியோ மாநாடு தொடர்பாகவும், அடுத்த கட்ட சமாதான முயற்சிகள் குறித்தும் இந்தியாவிற்கு விளக்கமளிக்க சிறிலங்கா அரசியல் யாப்பு அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் புதுடில்லி செல்லவுள்ளார்.

ஜப்பானிலிருந்து இந்தியா செல்லும் அவர் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹா, எதிர்க்கட்சித் தலைவி சோனியாகாந்தி உட்பட முக்கிய தலைவர்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

## சமஷ்டி முறையிலான தீர்வு நோக்கி பேச்சுக்கள் முன்னெடுக்கப் பட வேண்டும்

### டோக்கியோ மாநாட்டில் ஆர்மிரேஜ்

பேச்சுவார்த்தை மூலம் இனப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என்ற நிலைப்பாட்டை மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதன் மூலம் விடுதலைப் புலிகள் நிருபிக்க வேண்டும் என்று அமெரிக்காவின் பிரதி ராஜாங்க அமைச்சர் ரிச்சட் ஆர்மிரேஜ் தெரிவித்துள்ளார்.



டோக்கியோ மாநாட்டில் நேற்று உரையாற்றிய அவர் அண்மையில் தென்னிலங்கையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தங்களின் போது விடுதலைப்புலிகள் நிவாரண உதவிகளை வழங்கியதைத் தமது உரையில் சுட்டிக்காட்டியதோடு வடக்கு - கிழக்கில் சர்வதேச உதவிகள் போதியளவில் சென்றடையவில்லை என்று விடுதலைப் புலிகள் வெளியிடும் அதிருப்தியையும் தாம் புரிந்து கொள்வதாகக் கூறியுள்ளார்.

அமெரிக்காவில் ஏப்பிரல் மாதத்தில் நடைபெற்ற முன்னோடி உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திலே விடுதலைப்புலிகளை அழைக்காமல் விடுத்து இந்த உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திற்கு அழைப்பதிலேயுள்ள சில நடைமுறைச் சிக்கல்களாகவும்

(08ஆம் பக்கம் பார்க்க)

## ரத்வத்தவின் சொத்துக்கள் குறித்த விசாரணைகள் பூர்த்தி

(கொழும்பு)

சிறிலங்காவின் முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்தவின் சொத்து தொடர்பான விசாரணை அறிக்கை முடிவிற்கு வந்துள்ளதாக சிறிலங்காவின் புலனாய்வுப் பிரிவினர் அறிவித்துள்ளனர் தனியார் வங்கியொன்றில் ரத்வத்தவின் பெயரில் இருந்ததாகக் கூறப்படும் நான்கு கோடி ரூபாய் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்தே புலனாய்வுப் பிரிவினரின் விசாரணைக்கு அரசாங்கம் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கொழும்பு – தூத்துக்குடி பயணிகள் கப்பல் சேவை

இலங்கைக்கும், இந்தியாவிற்கும் இடையே பயணிகள் கப்பல் சேவையை ஆரம்பிப்பதற்கான உடன்படிக்கைக்கு இந்திய மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

சிறிலங்கா அரசு ஏற்கனவே இதற்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது. இதன் அடிப்படையில் விரைவில் இச் சேவை கொழும்பு துறைமுகத்திற்கும், தூத்துக்குடி துறைமுகத்திற்குமிடையே ஆரம்பமாக வுள்ளது.

வெகுவிரைவில் இந்திய கப்பல் போக்குவரத்து அமைச்சர் இலங்கைக்கு விஜயம் செய்து இவ் உடன்படிக்கையில் கைச்சாத்திடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வடக்கு–கிழக்கிற்கான கட்டமைப்புப் பற்றி டோக்கியோ மாநாட்டில் ரணில் பிரஸ்தாபம்

டோக்கியோ கொடையாளிகள் மாநாடு சமாதானம், பொருளாதார அபிவிருத்தி என்பனவற்றிற்கான ஒரு சகாப்தம் முடிவடைந்து மற்றொரு சுபீட்சகரமான சகாப்தம் ஆரம்பிப்பதைக் குறிக்கின்றது என ரணில் விக்கிரமசிங்க நேற்று டோக்கியோவில் உதவி வழங்கும் மாநாட்டில் உரையாற்றும்போது கூறியுள்ளார்.

இலங்கை சமாதானத்தை அடைவதற்கான முன்னேற்றப் பாதையில் பெருமளவு தூரத்தைக் கடந்துள்ளது. ஆனால், அவை தடைகளையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது. நாடு தற்போது அத்தகைய நிலையை அடைந்துள்ளது. மாநாட்டில் புலிகள் கலந்து கொள்ளாதிருப்பது கவலைக்குரிய விடயம். எனினும், சமாதான வழிமுறை ஒரு முதிர்ந்த நிலையை அடைந்துள்ளதால் சமாதான முயற்சிகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல இயலும்.

வட-கிழக்கை அபிவிருத்தி செய்வதில் அரசுடன் புலிகள் தொடர்ந்தும்

(08ஆம் பக்கம் பார்க்க)




## மீள் குடியமர்ந்த மக்களுக்கு வீடமைப்புக்கும் பணி ஆரம்பம்

தம்பலகாமப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள பத்தினிபுரம் கிராமத்தில் மீள் குடியமரும் இடம்பெயர்ந்த மக்களுக்கென முதலாவது கட்டமாக 10 வீடுகளைக் கட்டும் பணியை தமிழர் புனர்வாழ்வுக்கழக திருகோணமலை மாவட்ட செயலகம் நேற்று ஆரம்பித்துள்ளது. இதற்கான அடிக்கல்லை திருகோணமலை அரசியல்துறைப் பொறுப்பாளர் திலக் நாட்டி வைத்துள்ளார். இந்நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக்கழக திருகோணமலை மாவட்டப்பணிப்பாளர் மாதவராசா, நெறியாளர் சபை உறுப்பினர்களான குமரகுருபரன், சாகுல் ஹமீத், கமலாதேவி தில்லைநாதன், தமிழர் புனர்வாழ்வுக்கழக திருமலை செயற்றிட்ட அதிகாரி கலைவர்ணன் உட்பட பிரதேச செயலர், அதிகாரிகள், கிராம அலுவலர்கள் என பலர் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (25)

## சமாதான முயற்சிகள் தொடருமாயின் அதிகளவான உதவிகளை வழங்கமுடியும்

### உதவி வழங்கும் மாநாட்டில் ஜப்பான் பிரதமர்



இலங்கையின் சமாதான முயற்சிகள் தொடருகின்ற பட்சத் தில்தான் நாங்கள் அதிகளவிலான பல உதவிகளை வழங்க முடியும். சமாதானத்தைப் பொறுத்துத்தான் எங்களுடைய உதவிகள் அமையும் என ஜப்பானிய பிரதமர் கொசுமி தெரிவித்தார்.

டோக்கியோவில் நேற்று ஆரம்பமான இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டை ஆரம்பித்து கலந்து உரையாற்றிய அவர் மேலும் குறிப்பிடுகையில்; இலங்கையின் கடந்த இருபது வருட கால யுத்த அழிவுகளிலிருந்து இலங்கையை மீட்டெடுப்பதற்காக ஜப்பான் முக்கியமாக உதவி வழங்கும் நாடாக முன்னிலையில் நிற்கின்றது என்றும் குறிப்பிட்டார்.

இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாடு நேற்றுக் காலை ஜப்பானில்

(08ஆம் பக்கம் பார்க்க)

## பண்பாட்டு ஊர்வலம், கலை நிகழ்வுகளுடன் சிறப்புற நடந்தேறிய வள்ளுவர் விழா

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி தமிழ்ச் சங்கத்தினால் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்ட திருக்குறள் மாநாடு நேற்றுடன் நிறைவடைந்துள்ளது.

இம்மாநாட்டின் இறுதி நாள் நிகழ்வின் முதல் நிகழ்வு நேற்று மாலை 4.00 மணியளவில் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் பண்பாட்டு ஊர்வலத்துடன் ஆரம்பமானது. ஊர்வலத்தில் திருவள்ளுவரின் பெரியளவிலான உருவப்படம் முன்னே நகர அதனைத் தொடர்ந்து நாதஸ்வர இசை இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து சேரன் அணிவகுப்பு, சோழன் அணிவகுப்பு, பாண்டியன் அணிவகுப்பு, இராவணன் அணிவகுப்பு, பண்டாரவன்னியன் அணிவகுப்பு என்பன பாடசாலை மாணவர்களால் நிகழ்த்தப்பட்டன.

அதனையடுத்து வேடப்புனைவு நகர்ந்தது. வேடப்புனைவில் திருவள்ளுவர், ஔவையார், பாரதியார், பாரதிதாசன், இளங்கோ அடிகள், விபுலாநந்த அடிகள், தனிநாயக அடிகள் ஆகியோரின் வேடங்கள் புனையப்பட்ட மாணவர்கள் அணி வகுப்பில் கலந்து கொண்டனர்.

அத்துடன், காவடி, கரகம் போன்ற பல்வேறு பாரம்பரிய பண்பாட்டு நிகழ்வுகள் நிகழ்த்தப்பட்டு ஏராளமான மாணவர்கள், ஆசிரியர்கள், மக்கள் எனப் பலரும் ஊர்வலமாக கிளி. மகா வித்தியாலயத்தை பிற்பகல் 5.00 மணியளவில் வந்தடைந்தனர்.

அதனைத் தொடர்ந்து மங்கல விளக்கினை அரச அதிபர் இராசநாயகம், மலேசிய பேராசிரியர் குமரன் ஆகியோர் ஏற்றினர். அடுத்து தமிழீழத் தேசியக் கொடியினை

(08ஆம் பக்கம் பார்க்க)

# சின்னமுத்து தடுப்பூசி மருந்து வழங்குவதற்கு நடவடிக்கை

(அலுவலக செய்தியாளர்)

இலங்கையில் சகல பகுதிகளிலுமுள்ள சிறுவர்களுக்கு சின்னமுத்து தடுப்பூசி மருந்து வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குறிப்பாக 10 வயது முதல் 14 வயதிற்கு உட்பட்ட சிறுவர்களுக்கு மேற்படி சின்னமுத்து தடுப்பூசி மருந்து விரைவில் வழங்குவதற்கு விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இது குறித்து கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி கா.சுஜந்தன் கருத்துத் தெரிவிக்கையில், மேற்படி தடுப்பு மருந்து சின்னமுத்து நோயிலிருந்து வருமுன்காப்பு நடவடிக்கையாகவும், மற்றும் சிறார்களின் பின்விளைவு நோய்களிலிருந்து காப்பாற்றும் முகமாகவுமே மேற்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதெனவும் எனவே மேற்படி சின்னமுத்து தடுப்பூசி மருந்தினை வன்னி மாவட்டத்திலுள்ள 10 வயதிற்கும் 14 வயதிற்குமுட்பட்ட சிறுவர் சிறுமிகள் வழங்கப்படும் தினங்களில் தவறாது பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும், இதற்குப் பெற்றோர்கள் தங்கள் பூரண ஒத்துழைப்புக்களை நல்கி சிறுவர்களை இத் தடுப்பூசியினைப் பெற்றிட ஊக்குவிக்க வேண்டுமெனவும் வேண்டியுள்ளார். (சோ)

# கிளிநொச்சி மக்கள் வங்கியில் திரவப் பணத்திற்கு தட்டுப்பாடு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மக்கள் வங்கியில் திரவப்பணத்திற்கு தட்டுப்பாடு நிலவி வருவதனைக் காணக்கூடியதாகவுள்ளது. இதன் காரணத்தினால் வாடிக்கையாளர்கள் வங்கியில் தங்கள் வைப்பிலிருக்கும் பணத்தில் தேவைக்கேற்ற வகையில் பணத்தினை பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இது குறித்து கிளி.மாவட்ட மக்கள் வங்கியினருடன் எமது செய்தியாளர் தொடர்பு கொண்டபொழுது, கிளிநொச்சி மக்கள் வங்கியில் திரவப்பணத்திற்கு தட்டுப்பாடு நிலவியுள்ளது உண்மையெனவும், கொழும்பிலிருந்து பணத்தை எடுத்து வருவதற்கு நடவடிக்கை மேற்கொண்ட பொழுதும் பணத்தை எடுத்து வருவதற்கு வங்கியின் வாகனச் சாரதி விடுப்பில் சென்றுள்ளமையினால் திரவப்பணம் எடுத்துவர முடியாத நிலை ஏற்பட்டுள்ளதெனவும் இன்னும் ஓரிரு தினங்களில் மேற்படி திரவப்பணம் வங்கிக்கு எடுத்துவரப்பட்டு விடுமெனவும் கிளி. மக்கள் வங்கியினர் தெரிவித்துள்ளனர். (சோ)

# நூலக முகாமைத்துவ பயிற்சி செயலமர்வு இன்று ஆரம்பம்

யாழ். மாவட்டத்தில் வலிகாமம், யாழ்ப்பாணம், தீவகம், கிளிநொச்சி ஆகிய வலயங்களைச் சேர்ந்த ஆசிரிய நூலகர்களுக்கு நூலக முகாமைத்துவப் பயிற்சி செயலமர்வு இன்று தொடக்கம் 14ஆம் திகதி வரை யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வு கொழும்பு பல்கலைக்கழகத்தின் நூலகம், தகவல் தொழில்நுட்ப விஞ்ஞானத்திற்கு மான தேசிய நிறுவகம் ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ். பல்கலைக்கழக நூலகம், தேசிய நூலகம், புள்ளிவிபரத் திணைக்களம், மாகாணக்கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த வள வாளர்களினால் நடத்தப்படவுள்ளது. இச்செயலமர்வில் கலந்து கொள்வதற்கு தகுதி வாய்ந்த, பொருத்த மான ஆசிரியர்களை அனுப்பி வைக்காத பாடசாலைகளுக்கு ஆசிரிய நூலக நியமனம் வழங்கப்படமாட்டாது என்றும் இச்செயலமர்வுகளில் கலந்துகொள்ளும் ஆசிரியர்களுக்கு கடமை லீவுடன் உணவு, தங்குமிட வசதி என்பன வழங்கப்படும் எனவும் மாகாண இணைப்பாளரும், உதவிக் கல்விப் பணிப்பாளருமான ந.அனந்தராஜ் தெரிவித்துள்ளார்.

# அத்தியாவசிய சேவைகள் கூட்டம்

(அலுவலக செய்தியாளர்)

கிளி.மாவட்ட அத்தியாவசிய சேவைகள் குழுக்கூட்டம் இன்று காலை 10.00 மணிக்கு கிளிநொச்சி அரச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

கிளி.அரச அதிபர் தி.இராசநாயகம் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் சகல திணைக்கள அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளை தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் கிளி. மாவட்ட மேலதிக அரச அதிபர் நா.வேதநாயகன் வேண்டுகை விடுத்துள்ளார். (சோ)


## கரைச்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம், வட்டக்கச்சி

## ஏல விற்பனை

01. முச்சக்கர வண்டி த-1619
02. அரிசியாலை உதிரிப்பாகங்கள்
03. கோழித்தீன் உபகரணங்கள்
04. தெளிகருவிகள்

கரைச்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கத்திற்கு சொந்தமான மேற்படி பொருட்கள் ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன. இப் பொருட்களை சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் வேலை நாட்களில் பார்வையிடலாம். கூடிய ஏல விலையில் பொருட்களைப் பெற்றுக் கொள்பவர் உடனடியாகப் பெறுமதியினைச் செலுத்த வேண்டும்.

ஏலத்தில் விடப்படும் திகதி :- 12.06.2003 (வியாழக்கிழமை)
ஏலத்தில் விடப்படும் நேரம் :- மு.ப 11.00 மணிக்கு

பொதுமுகாமையாளர்,
வே.செல்லத்துரை.
கரைச்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம்,
வட்டக்கச்சி.

தலைவர் :
க.தர்மசூரியர்

(சி-8151)




## தென்னைநாற்று விற்பனை

பூநகரி ப.நோ.கூ. சங்கத்தில் தரமான தென்னைநாற்று விற்பனைக்கு உள்ளது. தேவையானோர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும், விலை ரூபா 40/= 100ற்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு விசேட கழிவு உண்டு.

திரு. ந. பாலசுப்பிரமணியம்,
பொதுமுகாமையாளர்,
பூநகரி ப. நோ. கூ.சங்கம்.

(சி-8134)


# வீர வணக்கம்



லெப். கேணல் அன்பு / அம்மா

வைத்திலிங்கம் திருக்கேதீஸ்வரன்
பாடசாலை வீதி, திருநெல்வேலி
யாழ்ப்பாணம்.

மண்ணில் முத்தாய் மண்ணில் வித்தாய்
03.09.1965 10.06.1998

10.06.1998 அன்று சுதந்திரபுர பகுதியில் விமான எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவடைந்த லெப். கேணல் அன்பு / அம்மா, கப்டன் கலைமதி இவர்களுடன் அன்றைய தினம் வீரச்சாவடைந்த மாவீரர்கள், பணியாளர்கள், பொது மக்களையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

பணியாளர்கள்
வழங்கல் பகுதி

(3229)

# அமெரிக்க அச்சுறுத்தல் தொடர்ந்தால் அணுவாயுத உற்பத்தி முன்னெடுக்கப்படும்!

## - வடகொரிய அரசு எச்சரிக்கை

**அமெரிக்கா தொடர்ந்து அச்சுறுத்தல் விடுத்து வருமானால் அணுவாயுதத்தை உற்பத்தி செய்வதைத் தவிர வேறு வழி கிடையாது என வடகொரியா எச்சரிக்கை விடுத்துள்ளது.**

வடகொரிய அரசு விடுத்துள்ள செய்திக் குறிப்பொன்றில் அணுவாயுதத்தை உற்பத்தி செய்வதன் மூலம் பெருமளவு பணத்தை மீதப்படுத்த முடியும் என்று குறிப்பிட்டுள்ளது.

வழமையாக பல்வேறு வகையான ஆயுதங்களை கொள்வனவு செய்வதற்கு கணிசமான நிதி செலவிடப்படுகின்றது. எனினும் அணுவாயுதத்தை உற்பத்தி செய்தால் இத்தகைய பெரும் செலவினத்தைக் குறைக்க முடியும்.

இதன் மூலம் சேமிக்கப்படும் பணத்தை வடகொரியாவின் பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளில் செலவிடப்படும் என்றும் வடகொரியா மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை வடகொரியா அணுவாயுதங்களை உற்பத்தி செய்வதை தமது நாடு ஏற்றுக் கொள்ளமாட்டாது என்றும் இந்த பிரச்சினைக்கு பேச்சுவார்த்தைகள் மூலம் சமாதானத் தீர்வு காணப்படவேண்டும் என்றும் தென்கொரிய சனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஜப்பானுக்கு நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டு சென்ற தென்கொரிய சனாதிபதி ஜப்பான் பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; வடகொரியாவிடம் அணுவாயுதம் இருப்பதை தென்கொரியா ஏற்றுக் கொள்ள மாட்டாது என்றும் சமாதான அடிப்படையில் அல்லது இராஜதந்திர முயற்சி மூலம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முயற்சி செய்யப்படும் எனத் தெரிவித்தார்.

ஜப்பானிய பிரதமர் கொய்சுமியுடன் தான் நடத்திய பேச்சுவார்த்தையின் வெற்றிபற்றி குறிப்பிட்ட அவர், இரு நாடுகளுக்கும் இடையிலான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் முக்கிய இடம் பெற்றது என்று குறிப்பிட்டார்.



உலக சூழல் தினத்தை முன்னிட்டு தண்ணீர் விரயமாவதைத் தடுக்க வலியுறுத்தி பிறஸ்லஸ் றோயல் பூங்காவில் செயற்கை நீர்வீழ்ச்சியை மிதிவண்டியில் சுற்றிவரும் பெண்மணி.

## பெரும்பான்மை ஆதரவு!

ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைய போலந்து மக்கள் தமது பூரண அங்கீகாரத்தை அரசுக்கு அளித்துள்ளனர்.

2ம் நாள் வாக்கெடுப்பின் பின் வெளியான இறுதிக்கட்ட முடிவுகளின்படி 78 சதவீதமான மக்கள் இதற்கான அங்கீகாரத்தை வழங்கியுள்ளனர்.

# தொலைத் தொடர்புகளின்றி பாக்தாத் மக்கள் தவிப்பு!


பாக்தாத் நகரின் தொலைத் தொடர்புகள் இதுவரை சீர்செய்யப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்கத் தாக்குதலில் பாக்தாத்தின் 17 தொலைத் தொடர்பு பரிவர்த்தன நிலையங்கள் தாக்கி அழிக்கப்பட்டதாகவும் நகரில் உள்ள ஐம்பது இலட்சம் மக்களில் எவருக்கேனும் அவசர வைத்திய சிகிச்சை தேவைப்பட்டால் கூட உடனடித் தொலைத் தொடர்புகள் அவர்களைப் பெரும் சிரமத்துக்கு உள்ளாக்கி இருப்பதாக ரொய்ட்டர் தெரிவிக்கின்றது.

மூன்று வாரங்களில் ஈராக்கை கைப்பற்றிய அமெரிக்காவால் தொலைத் தொடர்பை சரியாக செப்பனிட முடியாத நிலை காணப்படுவதை அடுத்து மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

# காஸாவில் சோதனை நிலையத்தில் மோதல்; 4 இஸ்ரேலியப் படையினர், 3 தீவிரவாதிகள் பலி!

பலஸ்தீனத்தின காஸாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலொன்றில் நான்கு இஸ்ரேலியப் படையினரும் மூன்று பலஸ்தீனத் தீவிரவாதிகளும் கொல்லப்பட்டனர்.




இரத்தம் தோய்ந்த மண் தரையில் காணப்படும் இஸ்ரேலிய இராணுவ தலைக்கவசம்

இஸ்ரேலிய சோதனை நிலையத்தைக் கடக்க முற்பட்ட போதே இந்த மோதல்வெடித்தாகத் தெரிவிக்கப்படுகின்றது. முதலில் இஸ்ரேலியப் படையினர் தாக்குதலை நடத்தியதாகக் கூறப்படுகின்றது.

இச்சம்பவம் மத்திய கிழக்குச் சமாதான முயற்சிகளைப் பாதிக்கும் எனக் கூறப்படுகின்றது.

பலஸ்தீனப் பிரதமர் போர் நிறுத்தம் செய்யப்படும் என்று உறுதியளித்த பின்னர் நடந்த முதலாவது சம்பவம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

ஹமாஸ், இஸ்ரேலிய ஜிகாத் அமைப்புக்களைச் சேர்ந்தவர்களே தாக்குதல் நடத்தினர் என்று இஸ்ரேல் அறிவித்துள்ளது.



இஸ்ரேலியப் படைவீரர் மோதலில் கொல்லப்பட்ட பலஸ்தீன தீவிரவாதியின் சடலத்தை ட்ரக்கில் ஏற்றுகிறார்.

# அமெரிக்க டொலரின் பெறுமதி வீழ்ச்சி 'ஒபேக்' நாடுகள் பெரும் பாதிப்பு!

டொலர் நாணயத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் எரிபொருள் விற்பனை நடவடிக்கைகள் யூரோ நாணயத்துக்கு மாற்றப்பட மாட்டாது என்று 'ஒபேக்' அமைப்பு கூறியுள்ளது.

அமெரிக்க டொலரின் பெறுமதி உலக சந்தையில் வீழ்ச்சி அடைந்துள்ள போதிலும் எரிபொருள் விற்பனையில் யூரோ நாணயத்தின்படி மேற்கொள்வதற்கு எவ்வித யோசனையும் இல்லை என ஒபேக் தலைவர் அப்துல்லா அல் அஸ்யியா தெரிவித்துள்ளார்.

யூரோ உட்பட ஏனைய பிரதான நாணயங்களுடன் ஒப்பிடும் போது டொலரின் பெறுமதி குறைந்துள்ளதாகவும் இதன் காரணமாக எரிபொருளை இறக்குமதி செய்யும் நாடுகள் பலனடைந்துள்ளதாக கட்டாரில் எரிபொருள் அமைச்சராக இருக்கும் ஒபேக் தலைவர் கூறியுள்ளார்.

டொலர் பெறுமதி குறைந்துள்ளதால் தமது அமைப்பு பெரும் நெருக்கடியைச் சந்தித்துள்ளதாகக் குறிப்பிட்ட அவர் யூரோவுடன் ஒப்பிடும் போது டொலரின் பெறுமதி இருபது வீதத்தால் குறைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது என்றார்.

# கனடாவின் ரொரன்ரோவில் சார்ஸுக்கு இருவர் பலி!

(கனடா)

கனடாவின் ரொரன்ரோ நகர் மேலும் இருவரை சார்ஸ் எனும் கொடிய நோய்க்குப் பலிகொடுத்துள்ளது.

நேற்று முன்தினம் நிகழ்ந்த இவ் உயிரிழப்பினால் கனடாவில் சார்ஸ் நோய்க்கு பலியானவர்களின் எண்ணிக்கை 33ஆல் அதிகரித்துள்ளது.

இறந்தவர்களில் 66 வயதுடைய பெண் ஒருவர் எனவும் மற்றவர் 63 வயதுடைய ஆண் எனவும் அறிவிக்கப்படுகிறது.

இதேவேளை, சார்ஸ் நோயினால் பாதிக்கப்பட்ட 68 பேருக்கு ரொரன்ரோவில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் இவர்களில் 22 பேரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆசியாவுக்கு வெளியே சார்ஸ் நோயினால் பாதிக்கப்பட்ட இடங்களில் ரொரன்ரோ விளங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை உலகில் 30 நாடுகளில் கிட்டத்தட்ட 780 பேர் சார்ஸ் நோய்க்குப் பலியாகியுள்ளதாகவும் 8400 பேர் இந் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# ஷரோன், அபாஸிற்கு எதிராக போராட்டங்கள் அதிகரிப்பு!

பலஸ்தீனத்தில் இஸ்ரேலிய, பலஸ்தீன பிரதமர்களுக்கெதிராகப் போராட்டங்கள் இடம் பெற்று வருகின்றன.இது கடந்த சில நாட்களாக அதிகரித்து இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

பலஸ்தீன தீவிரவாத அமைப்புக்கள் பிரதமர் மகமூத் அபாஸிற்கு எதிராக போராட்டங்களை விரிவுபடுத்தி வருகின்றன. "பலஸ்தீனத்திற்கு எதிராக அபாஸ் தேசத்துரோகம் புரிகிறார்" என அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

மேலும், மேற்குக்கரையில் குடியேறியுள்ள இஸ்ரேலியர்களும் பிரதமர் ஏரியல் ஷரோனுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர். எமது குடியிருப்புக்களை இடிக்காதே பலஸ்தீனத்துடன் கூட்டுச் சேராதே என அவர்கள் கிளர்ந்தெழுந்துள்ளனர்.



கியூப தலைநகர் ஹவானாவில் தேசியக் கொடிகளை ஏந்தி ஆயிரக்கணக்கான மக்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றில் பங்கேற்கின்றனர்.

# ஒரு பாடசாலையின் அவலநிலை

வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் இயங்கிவரும் பாடசாலைகளில் ஒன்றே வ/பேயாடி கூழாங்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைஆகும். பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் இயங்கிவரும் இப்பாடசாலை பல கஷ்டங்களின் மத்தியில் இயங்கி வருவதனை அவதானித்தேன்.

தினமும் காலையிலும், மாலையிலும் பாடசாலை முன்பாகவே தான் பயணிப்பதால் இந்தப் பாடசாலை படும் கஷ்டங்களை ஓரளவிற்கு அறிந்து கொண்டேன் இந்தப் பாடசாலையில் அடிப்படை வசதிகள் இன்மையால் அதிபரும், ஆசிரியர்களும் எதிர்நோக்கும் கஷ்டங்களை அவதானித்த நான் இந்தப் பாடசாலைக்குச் சென்று இதன் உண்மைநிலைகளை அறிய ஆசைப்பட்டேன். அதன் விளைவாக தனியே நான் மட்டும் செல்வதைவிட எமது ஊடகவியலாளர்கள் பலரையும் அழைத்துச் சென்று உண்மைநிலையை அவர்களும் அறியவைக்க எண்ணினேன். ஊடகவியலாளர்களாகிய நாம் இப்பாடசாலைக்குச் சென்று நிலைமையைப் பார்ப்பதன் மூலமும் கேட்டறிவதன் மூலமும் பேனா முனை மூலம் எம்மால் செய்யக்கூடிய உயர்ந்த பட்ச உதவியை இந்தப் பாடசாலைக்கு செய்யமுடியும் என்ற நம்பிக்கையில் ஊடகவியலாளர்களை ஒருங்கிணைக்கும் முயற்சியில் ஈடுபட்டேன்.

எமது வவுனியா மாவட்டத்தில் உள்ள தமிழ், சிங்கள ஊடகவியலாளருக்கு மிகக் கஷ்டமான நிலையில் ஒரு பாடசாலை எமது பகுதியில் இயங்குகின்றது. அந்தப் பாடசாலைக்கு நாம் சென்று நிலைமையைக் கேட்டறிய வேண்டும். என்று நான் கூறியபோது பல ஊடகவியலாளர்கள் அங்கு செல்ல விரும்பினார்கள் இதன் விளைவாக நாம் 30-05-2003 அன்று பாடசாலைக்குச் செல்லத் திட்டமிட்டோம்.

குறிப்பிட்ட தினம் காலை10.00 மணிக்கு வவுனியா தேசிய கல்வியியற்கல்லூரி முன்பாக இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம், ஐ.பி.சி., திவயின, தினக்குரல், ஈழநாடு, தினகரன், ஈழநாதம், சக்திரீ.வி., சக்தி எவ்.எம், வலம்புரி, எம்.ரீ.வி. ஆகியவற்றின் ஊடகவியலாளர்கள் ஒன்று கூடி பாடசாலைக்குச் சென்றோம்.

நாம் பாடசாலைக்குச் சென்றபோது அங்கு அதிபர் T.இராசநாயகம் அங்கு இல்லை. அவர் வலயக்கல்வி அலுவலகத்தில் நடைபெறும் அதிபர் கூட்டத்திற்குச் சென்றுவிட்டதாக பிரதி அதிபர் செல்வராஜா எமக்குக் கூறினார். அவர் எம்மை அலுவலகத்தினுள் அழைத்துச் சென்று இருத்திவிட்டு தாம்படும் துன்பங்களைக் கொட்டித் தீர்த்தார்.

இந்தப் பாடசாலையில் 524 மாணவர்கள் உள்ளனர். ஆனால் தினமும் சராசரி 350 மாணவர்களே பாடசாலைக்கு வருகை தருகின்றனர். பெற்றோரின் கல்வியறிவின்மையாலும் பொருளாதாரப் பிரச்சினைகளாலும் சூழல் பிரச்சினைகளாலும் தினமும் பல மாணவர்கள் பாடசாலைக்குச் சமுகமளிப்பதில்லை. பல மாணவர்களைப் பெற்றோர் பாடசாலைக்கு ஒழுங்காக அனுப்பாமல் தமது வீட்டில் உள்ள தம்பி, தங்கைகளைப் பராமரிக்கும், கூலி வேலைக்குக் கூட்டிச்செல்வதற்காகவும் பாடசாலைக்குசெல்லவிடாமல் தடுக்கின்றனர். இதனால் மாணவர் வரவு குறைவாக உள்ளமை பெரும் பிரச்சினையாக உள்ளது என்றார்.

*ஆசிரியர்களுக்கு பெரும் பற்றாக்குறை
*மாணவர்களுக்கான கதிரை மேசை ஒன்றுகூட இல்லை
*மலசலகூட வசதியில்லை
*அடைக்கப்பட்ட வகுப்பறைகள் இல்லை
*விளையாட்டு முற்றம் இல்லை
*கற்றல் – கற்பித்தல் சாதனங்கள் எதுவும் இல்லை
*கரும்பலகைகள் போதியளவில் இல்லை.
*ஆசிரியர் மேசை, கதிரை போதியளவில் இல்லை.
* ...........

மேலும் இப்பாடசாலையில் தரம்-1 தொடக்கம் தரம்-5வரையான வகுப்புக்களே உள்ளன. இவ்வகுப்புக்களில் 14பிரிவுகள் உள்ளன. இப்பாடசாலையில் உள்ள மாணவர்தொகைக்கேற்ப 17 ஆசிரியர்கள் இருக்க வேண்டும். ஆனால் இருப்பதோ 03 நிரந்தர ஆசிரியர்கள் மட்டுமே. அத்துடன் ஒரு கல்விச் சமுகத்தைத் தம்மால் கட்டியெழுப்ப வேண்டும் என்ற உயரிய சிந்தையுடன் செயற்படும் தொண்டர் ஆசிரியர்கள் 10 பேரும் சேவையாற்றுகின்றனர். ஆரம்பக்கல்வியிலேயே அடிப்படை அறிவை ஊட்ட வேண்டிய ஆங்கிலம், போன்ற மிகமுக்கிய பாடங்களுக்கு ஆசிரியர்களே இல்லை. இதனால் எமது மாணவர்கள் இப்படங்களில் அடிப்படை அறிவே இல்லாமல் உள்ளனர் என்றார்.

எமது பாடசாலையில் உள்ள வகுப்புக்களில் 14 பிரிவுகள் உள்ளன. என்பதை ஏற்கனவே கூறியிருந்தேன். இதுவரை காலமும் எமது பாடசாலையில் ஆசிரியர் மேசை, கதிரை இருக்கவில்லை. தற்போது வடக்கு-கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (நிக்கொட்) மூலம் எட்டு ஆசிரியர் மேசைகளும், கதிரைகளும் வழங்கப்பட்டுள்ளன. 524 மாணவர்களில் ஒருவருக்குக் கூட கதிரை மேசை இல்லை என்றார்.

இவ்வருடம் பாடசாலை ஆரம்பமாகி 05 மாதங்கள் உருண்டோடிய நிலையில் தற்போதே இலவசப் பாடநூல்கள் முழுமையாக எமக்குக் கிடைத்துள்ளன. இவற்றை நாம் நேற்றே பெற்றுக் கொண்டோம். ஓரிரு தினங்களில் மாணவர்களுக்கு வழங்க உள்ளோம் என அலுவலகத்தின் ஒரு மூலையில் அடுக்கி வைக்கப் பட்டிருந்த இலவசப் பாடநூல்களை அவர் எமக்குக் காட்டினார்.

அதனைப் பார்த்த நாம் புதிய கல்விச் சீர்திருத்தத்தின்படி தரம்-05 இவ்வாண்டே நாடு முழுவதும் அறிமுகப்படுத்தப்பட்டது. இம்மாணவர்கள் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்ற இருந்தனர். இம்மாணவர்களுக்கு மே மாதத்தில் இலவசப் பாடநூல்களை வழங்கினால், அவர்களால் எவ்வாறு தம்மைப் பரீட்சைக்குத் தயார்ப்படுத்த முடியும்? இதனைக் கல்வி அமைச்சோ, அதிகாரிகளோ உணரத்த வறியமை ஏன்? என எண்ணினோம்.

இப்பாடசாலையில் மலசலகூட வசதி இல்லை. ஆசிரியர்களும் மாணவர்களும் நலன்புரி நிலையத்தில்உள்ள பொது மலசலகூடத்திற்கே செல்கின்றனர். இதனால் பெரும் கஷ்டத்தை நாம் எதிர்நோக்குகின்றோம் என அவர் ஏக்கப் பெருமூச்சுடன் சொல்லி முடித்தார். பின்னர் பாடசாலையைச் சுற்றிக் காட்டுவதற்காக எம்மை அவர் அழைத்தச் சென்றார்.

பாடசாலையில் ஒன்று கூட அடைக்கப்பட்ட வகுப்பறையாக இல்லை. அனைத்தும் திறந்த வெளிக் கூடங்களாகவே இருந்தன. ஒவ்வொரு வகுப்பிலும் 80க்கும் மேற்பட்ட மாணவர்கள் பூமித்தாயின் மடியிலே அமர்ந்திருந்தார்கள் மாணவர்களுக்குத்தான் கதிரை மேசையில்லை என்றால் சில வகுப்புக்களில் ஆசிரியர்களுக்குக் கூட கதிரை மேசை இருக்கவில்லை. ஆசிரியர் மேசை,கதிரை இருந்த சில வகுப்புக்களில் கதிரையில் அமர ஆசிரியர் இல்லை. அந்த வகுப்புக்களில் கற்பித்தலே நடைபெறுவதில்லை. என்பதற்குச் சான்றாககரும் பலகைகள் விளங்கின. கரும்பலகைகள் புதிதாகவே இருந்தன. ஒரு எழுத்துக்கூட அவற்றில் எழுதப்படவில்லை.




தாயில்லாப் பிள்ளைகள் போன்று அரவணைக்க ஆசிரியர் இல்லாத மாணவர்கள்

மேசை கதிரையும் இருந்தன. ஆனால் அங்கு கரும்பலகை இருக்கவில்லை. அங்கு நடைபெற்ற கற்பித்தலை சற்று அருகே சென்று அவதானித்தேன். கரும்பலகையில் எழுத வேண்டிய விடயங்களை ஆசிரியர் ஒவ்வொரு மாணவரினதும் கொப்பியில் எழுதி மாணவர்களுக்கு விளங்கப்படுத்தினார். அந்த ஆசிரியரின் பொறுமையையும் சேவை மனப்பான்மையையும் என் மனதாரப் பாராட்டினேன்.

அடுத்து உள்ள வகுப்பைப் பார்த்தேன் தாய் இல்லாப் பிள்ளைகள் போன்று ஏறத்தாழ 60 மாணவர்கள் ஆசிரியர் இல்லாமல் இருந்தார்கள். நான் அவ்வகுப்பினுள் சென்றபோது "எமக்கு புதுசேர் வந்திருக்கிறார்". எனச்சொல்லி துள்ளிக் குதித்தார்கள். ஒரு மாணவன் சேர்! எங்களுக்கு படிச்சுத்தாங்கோ என்றான். சிறிது நேரம் அந்த மாணவர்களுடன் உரையாடிவிட்டு வகுப்பைவிட்டு வெளியேறினேன். அவர்களுடன் உரையாடியதன் மூலம் அந்த மாணவர்களுக்கு கற்றலில் இருக்கும் ஆர்வத்தைப் புரிந்து கொண்டேன்.

அடுத்து ஒரு 100அடி மண்டபம் இருந்தது. அம்மண்டபத்தின் பெரும் பகுதி கூரை காற்றினால் எடுத்து வீசப்பட்டிருந்தது. கூரை மரங்கள் சில முறிந்திருந்தன. சில கூரைமரங்கள் இருந்த இடத்தையே காணவில்லை. இம்மண்டபத்தை திருத்த எம்மிடம் எந்த நிதியும் இல்லை என பிரதி அதிபர் தானாகவே கூறிவிட்டார்.

நாம் சென்ற நாள் அப்பாடசாலையில் 17ஆசிரியர்கள் இருந்திருக்க வேண்டும் ஆனால் 05 ஆசிரியர்களே இருந்தனர். அவர்கள் பலவகுப்புகளையும் ஒன்றிணைத்து பல்தரக் கற்பித்தலை மேற்கொண்டிருந்தனர். ஒரு வகுப்பில் ஏறத்தாள 80க்கும் மேற்பட்ட மாணவர்கள் இருந்தார்கள். அந்த வகுப்பில் கற்பித்துக்கொண்டிருந்த ஆசிரியையை அணுகி வகுப்பு நிலவரம் தொடர்பாகக் கேட்டேன். எனது வகுப்பில் 40 மாணவர்கள் உள்ளனர். இன்று பல ஆசிரியர்கள் செயலமர்விற்கு சென்றுள்ளமையால் பலதரக் கற்பித்தலை மேற்கொண்டுள்ளேன் என்றார். உங்கள் வகுப்பு மாணவர்களின் போசாக்கு நிலை தொடர்பாகக் கூறுங்கள் எனக் கேட்ட போது:- எனது வகுப்பில் உள்ள 75% ஆன மாணவர்கள் போசாக்குக் குறைந்தவர்களாகவே உள்ளனர். தினமும் 20-25 மாணவர்கள் காலைச் சாப்பாடு சாப்பிடாமலேயே பாடசாலைக்கு வருகின்றனர்."பசி வந்தால் பத்தும் பறந்து விடும்" என்பார்கள். எனது மாணவர்களில்




பல்தரக் கற்பித்தல் மேற்கொள்ளப்படும் ஒரு வகுப்பினைக் காணலாம்

பெரும்பாலானோர்பசியுடனேயே பாடசாலைக்கு வருகின்றனர். இந்நிலையில் அவர்களால் எவ்வாறு கற்றலில் கூடிய கவனம் செலுத்த முடியும்? எனினும் சில மாணவர்கள் மீத்திறன் கூடிய மாணவர்களாக உள்ளனர். அவர்களின் மீத்திறனை வளர்க்க இங்கு வெண்கட்டியை விட வேறு எந்தக் கற்றல் - கற்பித்தல் சாதனமும் இல்லை என்றார் இடைவேளை நேரமாகிவிட்டமையால் அந்த ஆசிரியைக்கு நன்றி கூறி விடைபெற்றுக் கொண்டுஅடுத்த மண்டபத்திற்குச் சென்றேன்.

**கண்டாவளையூர்**
**ஆறு.சுபாஸ்கரன்**
**(வவுனியா செய்தியாளர்)**

ஒரு வகுப்பில் மாணவர்கள் உணவு உண்டுகொண்டிருந்தனர். அவர்களின் உணவைப் பார்த்த போது பெரும்பாலான மாணவர்களின் உணவு போசாக்குக் குறைவானதாகவே இருந்தது. பலரும் பாணே கொண்டு வந்திருந்தனர். அவர்களால் எவ்வாறு கற்றலில் கவனம் செலுத்த முடியும் என எண்ணினேன்.



கூரைகள் தூக்கி வீசப்பட்ட நிலையில் உள்ள மண்டபம்

பாடசாலையை ஒரு சுற்றுச் சுற்றிவிட்டேன். புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கு அமைவான எந்த ஒரு அம்சத்தையும் நான் காணவில்லை. வகுப்புக்கள் அடைக்கப்பட்ட வகுப்பறைகளாக இல்லை. மாணவர்கள் குழு நிலையில் இருக்கவில்லை. குழு நிலையில் இருப்பதற்கேற்ற வகையில் மேசை, கதிரை இல்லை. மணல் மூலையோ, சுற்றாடல் மூலையோ, புத்தகங்கள் மூலையோ இல்லை. கற்றல்-கற்பித்தல் சாதனங்கள் எதனையும் காணவில்லை. கற்றல் கற்பித்தல் சாதனங்களைக் காட்சிப்படுத்துவதற்கேற்ற வகையில் எந்தவித ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை. விளையாட்டு முற்றம் என்றாலே என்ன என்று மாணவர்களுக்குத் தெரியவில்லை. இந்நிலையில் இங்கு கல்வி கற்கும் எமது இளைய தலைமுறையின் எதிர்காலம் எவ்வாறு அமையப்போகின்றது?

# 'சுதந்திரபுரம்' கிராமம் மீது

சிறிலங்காப் படைகள் தமது ஆக்கிரமிப்பு முயற்சிகள் தோல்வியைத் தழுவும் வேளையில் அப்பாவித் தமிழ் மக்களை விமானக் குண்டு வீச்சுகளாலும், எறிகணைத் தாக்குதல்களாலும்அழித்தொழிப்பது வழமையானதாகும்.

1997 மே யில் "வெற்றி நிச்சயம்" என்ற சங்கேதப் பேருடன் ஏ-9 வீதியூடாக தரை வழிப்பாதை ஒன்றை அமைத்து யாழ். இல் நிலை கொண்டிருந்த படையினருக்கு இலகுவான விநியோக வழியொன்றைத் திறக்க சந்திரிகா அரசாங்கம் முயன்றது. அது மட்டுமல்லாது இந்த ஊடறுப்பின் மூலம் வன்னியையும் இருகூறாகப் பிளந்து புலிகளின் பலத்தைச் சிதறடித்து அவர்களைச் சிறுசிறு குழுக்களாகப் பிரித்து இலகுவாக ஒழித்து அதன் மூலம் தமிழ் மக்களின் விடுதலைப் போரை அழித்து விடவும் முயன்றது.

நாள்கோள் பார்த்து பௌத்த பீடங்களின் "பிரித்" ஆசீர்வாதத்துடன் "சம்புமல்குமாரயா" ஜெனரல் அனுருத்த ரத்வத்தவின் தலைமையில் ஆரம்பமாகியது. இந்த முயற்சி.

பல்லாயிரம் கோடி ரூபா பணம் மட்டுமல்ல சிறிலங்காவின் அனைத்து வளங்களும் இதற்கென திருப்பப்பட்டன.

முப்படைகளையும் பொலிஸ் படையையும் சேர்ந்த பெரும் எண்ணிக்கையான மனித வலு இப்படை நடவடிக்கைக்குப் பயன்படுத்தப்பட் டது.

ஆனால் சிறிலங்காவின் மிக நீண்ட இராணுவ நடவடிக்கை என்ற பெயரை மட்டும் ஜெயசிக்குறு பெற்றதேயொழிய அதனால் தனது வெற்றியை நிச்சயப்படுத்திக்கொள்ள முடியவில்லை.

இந்நிலையை ஜீரணித்துக் கொள்ள முடியாத சமாதான தேவதையின் ஆட்சியும் அவருக்கு கீழிருந்த படைகளும் முல்லைத் தீவு மாவட்டத்தின் அமைதியான சிறிய கிராமமான சுதந்திரபுரத்தின் மீது குரூரமான தாக்குதலை நடத்தி வஞ்சம் தீர்த்துக் கொண்டன.

1998ஆம் ஆண்டு யூன் மாதம் இதேநாள் சிறிலங்கா விமானப் படையின் கிபிர்குண்டு வீச்சு விமானங்கள் காலை 9.00 மணியளவில் தமிழீழ வான்பரப்பில் நுழைந்து மேற்படி கிராமத்தின் மத்திய பகுதிகளில் தனது இன ஒழிப்பு நடவடிக்கையை ஆரம்பித்தன. அக்கணமே வன்னி மண்ணில் நிலை கொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினரும் தமது செயற்பாட்டை ஆரம்பித்து அந்த அப்பாவிக் கிராம மக்கள் மீது அரை மணி நேரத்தில் நூற்றுக்கு மேற்பட்ட ஆட்லறி எறிகணைகள் ஏவினர்.

இதனால் ஏதுமறியாத பச்சிளம் பாலகர்கள் பள்ளி மாணவர்கள் உட்பட 25 அப்பாவித் தமிழ மக்களின் உயிர் துடிக்க அவ்வவ் இடங்களில் கொல்லப்பட்டனர். அத்தோடு 50 இற்கும் அதிகமான அப்பாவி மக்கள் காயமடைந்தனர்.

**சுதந்திரபுரம் கிராமம் மீது சிறிலங்கா படை புரிந்த படுகொலைத் தாக்குதலின் 5ஆம் ஆண்டு நினைவு நாள் இன்றாகும்.**

அந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் உடல்கள் துண்டம் துண்டமாக அவர்கள் இருந்த வீட்டுக் காணியில் காணப்பட்டன.

தனது பிள்ளைகளை கண்ணெனக் காத்து அவர்களின் வயிற்றுப் பசிக்கு இரை தேடச் சென்ற வேளை பிணம் தின்னிக் கழுகின் இரைச்சலையும் செவிப்பறையில் இடித்த

# நடத்தப்பட்ட படுகொலைத்தாக்குதல்

அந்த வெடியோசையும் கேட்டு தனது பிள்ளைகள் என்னவானார்களோ என்று எண்ணியபடி மிக அவசரமாக தனது குடிசை நோக்கி வந்து கொண்டிருந்த அந்தத் தந்தை கண்ட காட்சி.

"செல் விழுந்து வெடிக்கத் தொடங்கியதும் எனது வீடு நோக்கி ஒடோடிச் சென்று பார்த்த போது எனது பிள்ளைகள் கால் வேறு கை வேறாக வளவெங்கும் சிதறிக் கிடந்தனர். குடிசை இருந்த இடத்தைக் காணவில்லை. முற்றத்தில் இருந்த மா மரம் அடியோடு அறுத்தெறியப்பட்டு அந்த மாமரத்தின் கிளைகள் எல்லாம் சின்னாபின்னமாகக் கிடந்ததோடு அதன் மீது நிலப்புழுதி படிந்து நிலமும் மரங்கள் மற்றைய பொருட்கள் எல்லாம் ஒரே நிறமாக இருந்தது.

அந்த மாமரத்தின் கீழ் எனது பிள்ளை அனுங்கும் சத்தம் கேட்டது. அங்கே விழுந்து கிடந்த மாமரத்தின் கொப்பைப் பிடித்தவாறு. எனது மூத்த மகனான ரமேஸ்குமார் என்பவர் அனுங்கியபடி உடலெங்கும் தசைகள் கிழிக்கப்பட்டு பிய்ந்து தொங்கியபடி கிடந்தான். அவனை இழுத்து எடுத்த போது அவனது பின்பகுதி எலும்புகள்தான் எனது கையில் தட்டுப்பட்டது. அருகில் கடைசிப்பிள்ளையான இரண்டு வயதுடைய சிறுமி இரத்த வெள்ளத்தில் துடிதுடித்துக் கொண்டு கிடந் தாள். மற் றைய மூன்று பிள்ளைகளையும் காணவில்லை. பின்னர் வெளியில் வந்து பார்த்த போது தூரத் தூரவாக கைகளும் கால்களும் துண்டு துண்டாகச் சிதறிக் கிடப்பதைக் கண்டேன்". அந்தப் பிள்ளைகளின் தந்தை கூறினார்.

இவ்விடத்தில் மட்டுமா? இவ்வாறான எத்தனை சம்பவங்கள் தமிழர் மீது திட்டமிட்டு நடத்தப்பட்டது. நவாலி சென்பீற்றஸ் தேவாலயம், நாகர்கோவில், மடுத்தேவாலயம், மந்துவில், என்று பட்டியலிட்டுக் கொண்டே செல்ல முடியும்.

இவ்வாறு எத்தனை மனித உயிர்கள் எமது மண்ணில் தாயின் முன்னால் பிள்ளையும், பிள்ளை முன்னால் தாயும், தந்தை முன்னிலை யில் பிள்ளையும் என்று கண்ட துண்டமாக வெட்டியும், சித்திரவதை செய்தும் கொடூரமான எறிகணைத் தாக்குதல், விமானத் தாக்குதல்கள் மூலம் காய் கனிஎன்றும் பாராது முழு மரத்தையே தறித்தெறிவது போன்று சிறிலங்காவின் ஆட்சிப் பீடத்திற்கு வரும் அரசுகள் அறுவடையை மேற்கொண்டு வருகின்றன.

இவ்வாறு எத்தனை விலைமதிப்பற்ற மனித உயிர்கள் சொந்த மண்ணில் வைத்துக் கொலை செய்யப்பட்டன. அத்தோடு மட்டும் தனது செயற்பாடுகளை நிறுத்திவிடவில்லை. தாய் நாட்டிலேயே அகதிகளாக்கப்பட்டும் தமது சொந்த இடங்களை இழந்து, சொந்த உறவுகளை இழந்து அநாதரவான நிலைக்குத் தள்ளப்பட்டதோடு ஒரு துன்ப வாழ்வைச் சுமந்து மக்களும் காலம் காலமாக வாழ்ந்து வருகின்றனர்.

வெள்ளைச் சீருடை அணிந்து வெள்ளை உள்ளங்களாகத் தமது எதிர்காலத்தை வளப்படுத்தும் நோக்கில் பள்ளிப் பராயத்தில் துள்ளித் திரிந்து, பாடசாலைக்குச் சென்று திரும்பி வராது. அவ்விடங்களில் பிணந்தின்னிக் கழுகுகளால் உயிர் குடிக்கப்பட்டன. அதுமட்டுமல்லாது அந்தச் சிறார்களின் உயிரற்ற உடலைக் கூட இறுதியாய் உறவுகள் பார்க்க முடியாது. சதைத் துண்டங்களாக கிழிக்கப்பட்டுப் பொதிகளாகவே, பார்க்க வைத்தனர்.

இப்படுகொலைகளெல்லாம் தமிழ் மக்களை மிரட்டவும் வஞ்சம் தீர்க்கவும் என சிறிலங்கா ஆட்சியாளர்களால் நடத்தப்பட்ட போதும் விளைவு அவ்வாறாக இருந்துவிடவில்லை. இவையெல்லாம் தமிழ் மக்களுக்குப் போராட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தவே உதவின.


ஓயாத அலைகளாய் எழுந்த போராட்டம் வெற்றி மேல் வெற்றி குவித்து இன்று உலகளாவிய ரீதியில் தமிழ் மக்களின் பலம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இப்படுகொலைகளால் எதிர்மறையான விளைவுகளே ஏற்படும் என்ற உலக நியதியை மீண்டும் ஒரு சரித்திரமாய் எழுதியிருக்கிறது.

**- சு.பாஸ்கரன்**

அறிவியல் உலகம்

# எம்.எஸ். ஒவ்வீஸ்

பிரயோக மென் பொருட்கள் பற்றி கடந்தவாரம் பார்த்தபோது பலவகையான மென்பொருட்கள் பற்றி மேலோட்டமாகப் பார்த்தோம். இவ்வகைக்குள் அடங்கும் மென்பொருட்களை பல்வேறு மென்பொருள் தயாரிப்பு நிறுவனங்கள் உருவாக்கி வருகின்றன. இவ்வாறான பெருந்தொகையான மென்பொருட்கள் உள்ள அதேவேளை மேலும் பல மென்பொருட்கள் வெளிவந்துகொண்டுமிருக்கின்றன. புதிய தேவைகளுக்கேற்ப கூடுதல் வசதிகளுடன் இவை உருவாக்கப்பட்டு வெளியிடப் படுகின்றன. இவ்வாறான மென்பொருட்களில் நாம் அன்றாடம் கேள்விப்படும் மென்பொருட்கள் சில பற்றிப் பார்ப்போம்.





இவ்வாறு பார்க்கும் போது எம்.எஸ்.ஒவ்வீஸ் (Ms-office) என்பது மிகவும் பிரபலமான பிரயோகமென்பொருளாகும். இந்த மென்பொருள் பற்றிய கற்கைகளே இப்பொழுது பல இடங்களில் இடம்பெற்று வருவதையும் அவதானிக்கலாம்.

எனவே **Ms-office** என்றால் என்ன? அதனை எவை எவற்றிற்குப் பயன்படுத்தலாம் என்பது குறித்து சுருக்கமாகப் பார்ப்போம்.


விண்டோஸ் பணிச்செயல் முறைமையை வெளியிட்டுள்ள மைக்றோ சொவ்ற் நிறுவனம் தயாரித்து வெளியிடும் முக்கியமான பிரயோக மென்பொருள் **(Application software)** அல்லது பிரயோகப் பொதி **(Application pakage)** எம்.எஸ். ஒவ்விஸ்**(Ms-office)** ஆகும். இங்கு **Ms** என்பது **Microsoft** என்னும் அந்த நிறுவனத்தைக் குறிப்பதாகும். ஓர் அலுவலகத்தை சிறப்பாக நடத்துவதற்குத் தேவையான அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியதாக இந்த மென்பொருள் இருக்கிறது என்பதை **office** என்ற சொல் குறிக்கிறது எனலாம்.

விண்டோஸ் ஒப்ரேற்றிங் சிஸ்ரத்தில் இந்த எம்.எஸ்.ஒவ்வீஸ் செயற்படுகிறது. மைக்கிறோ சொவ்ற் நிறுவனம் முதன் முதலில் விண்டோசுக்கான பிரயோக மென்பொருளாக 1990இல் எம்.எஸ்ஒவ்வீஸை வெளியிட்டது. பின்னர் விண்டோஸ் 3:1இல் இயங்கக் கூடிய ஒவ்வீஸ் 4:3 ஐயும் விண்டோஸ் 95இல் இயங்கக்கூடிய ஒவ்வீஸ் 7.0 ஐயும் தொடர்ந்து ஒவ்வீஸ் 97ஐயும் வெளியிட்டது. பின்னர் விண்டோஸ் 98இல் இயங்கக்கூடிய ஒவ்வீஸ் 2000ஐ வெளியிட்டது.




கடந்த வாரம் நாம் பொதுப் பிரயோக மென் பொருட்களைப்பற்றிப் பார்க்கும் போது சொற்தொகுப்பு மென்பொருட்கள் ஸ்பிரெட்சீஸ், டேற்றாபேஸ் போன்ற பல உட்பிரிவுகளைப் பார்த்தோம். இவ் ஒவ்வொரு உட்பிரிவுகளுக்குள் அடங்கக்கூடிய மென்பொருட்கள் இணைந்ததாகவே இவ்**Ms-office** காணப்படுவது அதன் சிறப்பு அம்சமாகும்.

**Ms-office** 2000 ஆனது பின்வரும் ஐந்து பிரிவுகளைக் கொண்டதாகும்.




1. வேர்ட்2000 **(Word 2000)**
2. எக்ஸெல் 2000 **(Excel 2000)**
3. அக்சஸ் 2000 **(Access 2000)**
4. பவர்பொயின்ற் 2000 **(Power point 2000)**
5. அவுட்லுக் 2000 **(Outlook 2000)**

போன்ற உப பிரிவுகளைக் கொண்டுள்ளது.

இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வேலையைச் சிறப்புறச் செய்யக் கூடியவகையில் அமைக்கப்பட்டுள்ளன.


1. கடிதங்கள் ஆவணங்கள் தயாரிக்க **Word**
2. கணக்கீடுகளைச் செய்ய **Excel**
3. தகவல்களைச் சேமிக்க **Access** என்பவற்றுடன்
4. விளம்பரம் போன்றவற்றை அமைக்க **Power Point**
5. வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவோருடன் தொடர்புகள் இணைப்புகளை இலகுவாக மேற்கொள்ள **Out look**-2000

இவ்வாறு பல்வேறு தேவைகளுக்காக **Ms-office** இலுள்ள பிரிவுகள் பயன்படுத்தப்படுகின்றன.

மைக்கிறோ சொவ்ற் நிறுவனமானது இதனுடன் நின்றுவிடவில்லை. புதிதாக அலுவலகத்தின் தேவைகள் அதிகரிக்க அதிகரிக்க அவற்றுக்கேற்ப புதிய வெளியீடுகளை வெளியிட்டு வருகின்றது.

உதாரணமாக மைக்கிறோ சொவ்ற் ஒவ்வீஸ் எக்ஸ்.பீ **(Ms Office xp)** என்பது 2001ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. இதில்

- ☐ வேர்ட் 2002
- ☐ எக்ஸெல் 2002
- ☐ அவுட்லுக் 2002
- ☐ பவர்பொயின்ற் 2002




- ☐ அக்ஸஸ் 2002
- ☐ பப்பிளிஸர் 2002
- ☐ புரண்ட்பேஸ் 2002

உட்பட பல்வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தக் கூடிய பல மென் பொருட்கள் உள்ளன.

அத்துடன் இந்த உப பிரிவுகளில் கூட பல்வேறு புதிய செயற்பாடுகளைச் செய்யக்கூடிய மாற்றங்கள் இணைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவை இணையப்பக்கங்களை வடிவமைக்கக் கூடப் பயன்படக்கூடியவையாகும்.

**சி.சிவபாலன்**

கிளி/மாவட்ட கூட்டுறவுச்சங்கங்களின் ஒன்றியம்

## பதவி வெற்றிடம் (வெளிவாரி)

**பதவி:** காவலாளி
சம்பளக்குறியீட்டு இலக்கம் 315/17
சம்பள அளவுத்திட்டம் - 31/99 சுற்றுநிருபத்தின்படி
3000 - 4150
55x10 60x10

**வயதெல்லை:** 21-45

**தகைமைகள்:** 05ஆம் வகுப்பு கல்வித்தராதரப்பத்திரமும், சிறந்த தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

ஒன்றியத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப்படிவத்தை மாத்திரமே பூர்த்தி செய்து அனுப்பல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தினையும், ஏனைய விபரங்களையும் பெற்றுக்கொள்வதற்காக தங்களது பெயர், முகவரி எழுதப்பட்ட 9" தர 4" அளவிலான முத்திரைக்கடித உறை ஒன்றை 16-06-2003க்கு முன்னர் கிளி / மாவட்ட கூட்டுறவுச்சங்கங்களின் ஒன்றியம், கனகபுரம். கிளிநொச்சி என்ற முகவரிக்கு அனுப்புவதன் மூலமோ அல்லது நேரடியாகவோ பெற்றுக் கொள்ளலாம்.

**விண்ணப்ப முடிவுத்திகதி: 23-06-2003**

**தலைவர்,**
**கிளி/மாவட்ட கூட்டுறவுச்சங்கங்களின் ஒன்றியம்,**
**கனகபுரம், கிளிநொச்சி.**

(சி-8149)



## பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் [வ-து]

## 2003 கிளைக்குழுத்தேர்தல்

# அறிவித்தல்

வடக்கு - கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும் (வடக்கு-கிழக்கு) அவர்களினால் அங்கீகரிக்கப்பட்டதும், 1998 .05.19ஆம் திகதிய 1028/6 இலக்கம் கொண்ட அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான வடகிழக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் கிளைக்குழுக்களைத்தெரிவு செய்வதற்கான விதிகளுக்கமைய மேற்படி சங்கத்தின் சகல கிளைகளிற்குமான கிளைக் குழுத் தெரிவுக்கான கிளைப் பொதுச் சபைக்கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணையின்படி நடைபெறுவதற்காக ஒழுங்குகள், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்,கிளிநொச்சி அவர்களினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**திகதி: 14-06-2003 சனிக்கிழமை**
**நேரம்: முற்பகல் 9.30 மணி**

| தொ. இல. | கி. இலக்கம் | கிளையின் பெயர் | கிளை பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் இடங்கள் |
|---|---|---|---|
| 01. | 10 | கிராஞ்சி | கிராஞ்சி அ.த.க. பாடசாலை |
| 02. | 11 | வேரவில் | வேரவில் மகாவித்தியாலயம் |
| 03. | 12 | வலைப்பாடு | வலைப்பாடு அ.த.க. பாடசாலை |
| 04. | 13 | முழங்காவில் | முழங்காவில் ம. வித்தியாலயம் |
| 05. | 14 | இரணைதீவு | இரணைதீவு றோ.க.அ.த.க.பாடசாலை (இரணைமாதா நகர்) |
| 06. | 15 | பல்லவராயன் கட்டு சோலை | இல-111 கரியாலை நாகபடுவான் அ.த.க. பாடசாலை |
| 07. | 16 | நாச்சிக்குடா | நாச்சிக்குடா அ.த.க. பாடசாலை |
| 08. | 18 | ஜெயபுரம் | ஜெயபுரம் அ.த.க. பாடசாலை |
| 09. | 20 | குமுழமுனை | குமுழமுனை அ.த.க பாடசாலை |

**திகதி: 15-06-2003 ஞாயிற்றுக்கிழமை**
**நேரம்: முற்பகல் 9.30 மணி**

| தொ. இல. | கி. இலக்கம் | கிளையின் பெயா | கிளை பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் இடங்கள் |
|---|---|---|---|
| 01. | 01 | மட்டுவில் நாடு | பூநகரி மகாவித்தியாலயம் |
| 02. | 02 | வில்லடி | பூநகரி மகாவித்தியாலயம் |
| 03. | 03 | ஞானிமடம் | ஞானிமடம் அ.த.க. பாடசாலை |
| 04. | 04 | செட்டியகுறிச்சி | செட்டியகுறிச்சி கிளை நிலையம் |
| 05. | 05 | கறுக்காய்த்தீவு | கறுக்காய்த்தீவு அ.த.க. பாடசாலை |
| 06. | 06 | தம்பிராய் | தம்பிராய் அ.த.க. பாடசாலை |
| 07. | 07 | மறவகுறிச்சி | செல்விபுரம் அ.த.க. பாடசாலை |
| 08. | 08 | நல்லூர் | நல்லூர் மகாவித்தியாலயம் |
| 09. | 09 | கௌதாரிமுனை | கௌதாரிமுனை அ.த.க. பாடசாலை |
| 10. | 10 | சாமிப்புலம் | சாமிப்புலம் அ.த.க. பாடசாலை |

### முக்கிய குறிப்புக்கள்

01.இடம் பெயர்ந்த மக்கள் முற்று முழுதாக மீளக் குடியமராத காரணத்தினால் வாக்களிக்கத் தகுதியுள்ள அங்கத்தவர்களுக்கு தனித்தனி அறிவித்தல்கள் அனுப்பி வைக்கப்படவில்லை. இந்த அறிவித்தலை சொந்த அறிவித்தலாகத் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

02.இது சம்பந்தமான மேலதிக தகவல்களைக் கிளை நிலையங்களிலும், தலைமை அலுவலகத்திலும் பார்வையிடலாம்.

**பொதுச் செயலாளர்,**
**பூநகரி ப.நோ.கூ. சங்கம்,**
**பூநகரி, வாடியடி.**

(8135)


## 6ம் ஆண்டு நினைவலைகள்

வீரஜனனம் | வீரச்சாவு



04 □ 03 □ 1980 | 10 □ 06 □ 1997

### வீரவேங்கை-இந்திரா

(பிறேம ரஞ்சினி - சிவசாமி)
(வசாவிளான்-யாழ்)

இளையவளே இந்திராவே
வீட்டை வீட்டு விரட்டிய
சிங்களக் கூலிப்படையை – எம்
நாட்டை வீட்டே விரட்டுவேன் என
உறுதி பூண்டு பதினைந்து
வயதுதனில் சிறுத்தைப் புலியானாய்

ஜெயசிக்குறு என செருக்குடன்
வந்தவனைத் தடுத்து தாண்டிக்குளம்
புகுந்து தாக்கி தலை தெறித்தோட வைத்தாய்
பதினேழு வயதுதனில்

தாண்டிக்குளம் புகுந்த எம்குஞ்சு
எம்மைத் தள்ளாட வைத்துவிட்டாய்
உன் கல்லறையில் உறுதியெடுத்து
தமிழீழப் பாதையில் நாங்களும் செல்கின்றோம்.

இந்நாளில் வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களையும் நினைவுகூருகின்றோம்.

தகவல்- குடும்பத்தினர்
கரடிப்போக்கு,
யாழ். வீதி,
கிளிநொச்சி.

(3304)

## 6ஆம் ஆண்டில் உன் நினைவுடன்

தாயின் மடியில் | தாய்மண்ணுக்காய்



12 12 1981 | 10 06 1997

### வீரவேங்கை 2ம் லெப்.சுதர்சனா

அருந்தவராசா – நிக்சனா மேரி
கொக்குளாய்

பள்ளிசென்று துள்ளித் திரியும் வயதில்
பந்த பாசங்களை விட்டு பகை அழிக்கப்புறப்பட்ட
சுதர்சனா
ஆண்டுகள் ஆறு சென்றாலும்– எம்மனங்கள்
ஆறுமோ உன் நினைவு மறந்து.

இன்று சுதர்சனாவின் இல்லத்தில் நடைபெறும் 6ம் ஆண்டு நினைவு நாளில் கலந்துகொள்ளுமாறு போராளிகள், நண்பர்கள், உறவினர்களைக் கேட்டுக்கொள்கின்றனர்.

த.மு-
முல்லைப்பட்டினம்,
முல்லைத்தீவு.

(3225)

தகவல்-
குடும்பத்தினர்

## ஐந்தாம் ஆண்டு நினைவுநாள்

தோற்றம் | வீரச்சாவு



03 □ 09 □ 1965 | 10 □ 06 □ 1998

### லெப். கேணல் அன்பு (அம்மா)

[வைத்திலிங்கம் திருகேதீஸ்வரன்]

இவருடன் வீரச்சாவடைந்த
மாவீரர்களையும், பொதுமக்களையும்
இந்நாளில் நினைவு கூருகின்றோம்

- குடும்பத்தினர்.

(3311)

## சிந்தனைக்கு

ஒடுக்கப்படும் மக்களே ஒடுக்கு முறைக்கு எதிராகப் போராட வேண்டும்; அநீதிக்கு ஆளாகி நிற்பவர்களே அநீதியை ஒழித்துக் கட்ட முன்வர வேண்டும்.

தமிழீழத் தேசியத்தலைவர்



ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 10-06-2003

## முரண்பாடான பேச்சு!

"உதவி வழங்கும் நாடுகளின் டோக்கியோ மாநாட்டில் புலிகள் பங்கேற்றாலும், பங்கேற்காது விட்டாலும் இந்த மாநாட்டின் மூலம் வடக்கு-கிழக்கு அபிவிருத்திக்குக் கிடைக்கும் நிதி அவர்களின் நேரடிப் பங்குபற்றலில், அவர்களின் ஊடாக, அவர்களின் கண்காணிப்பில், அவர்களின் அதிகளவு பங்களிப்புடைய ஏற்பாடுகளுக்கு அமையவே செலவிடப்படும். இதனை உலக நாடுகளுக்கும், சர்வதேச அமைப்புகளுக்கும் எடுத்துரைக்கவுள்ளோம்" என அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் டோக்கியோ மாநாட்டிற்கு முன்பாக ஜப்பானில் வைத்துத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொடவோ, டோக்கியோவில் உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் பெறப்படும் நிதியுதவி நாட்டின் அரசியலமைப்புச் சட்டப்படியே செலவிடப்படும்" என அமைச்சர் பீரிஸின் கருத்திற்கு மாறுபட்ட விதத்தில் தமது கருத்தை வெளியிட்டுள்ளார்.

இவ்விரு அமைச்சர்களும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு இன்று மிகவும் வேண்டியவர்கள். விடுதலைப்புலிகளுடனான சமாதான முயற்சிகளில் பங்கேற்பவர்கள். இதேவேளை, டோக்கியோ உதவி வழங்கும் மாநாட்டில் கலந்து கொள்வதோடு, இம்மாநாடு வெற்றிகரமாக அமைவதற்குப் பெரும் முயற்சி மேற்கொண்டவர்கள். இவ்வாறு இருக்கையில் இவ்விரு சிரேஷ்ட அமைச்சர்களும், ஒருத்தருக்கொருத்தர் மாறுபட்ட ரீதியில் பேசுவதனால் தற்பொழுது எழும் கேள்வி அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன என்பதே.

டோக்கியோ மாநாட்டில் வடக்கு-கிழக்குப் புனரமைப்பிற்கென வழங்கப்படும் நிதியை விடுதலைப்புலிகளின் நேரடிப்பங்குபற்றலில், அவர்களின் ஊடாக அரசாங்கம் செலவிடு செய்யும் எனத் தமிழர் தரப்பில் எவருமே எதிர்பார்க்கவில்லை. அவ்வாறானதொரு தெளிவானதும், உறுதியானதுமானதொரு நிலைப்பாட்டை அரசாங்கம் மேற்கொள்ள முடியுமாயின் 'சிரானின்' செயற்பாட்டிற்கு அது ஏதோ ஒருவகையில் தனது ஒத்துழைப்பை வழங்கியிருக்கும். விடுதலைப்புலிகள் கோரிய இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக் குறித்து முன்னேற்றகரமான, பரிசீலனைக்குரிய திட்டம் ஒன்றை முன்வைத்திருக்கும்.

ஆகையினால், அரசாங்கம் புலிகள் ஊடாகவே வடக்கு-கிழக்கிற்கான நிதியுதவிகளைக் கையாளும் எனக் கூறுவது வெறும் கண்துடைப்பு நடவடிக்கையாகும். ஏனெனில் இது நடைமுறையில் சாத்தியப்பாடாகப் போவதில்லை. சிலவேளை அமைச்சர் பீரிஸ் கூறியதுபோன்று அரசாங்கம் வடக்கு - கிழக்கிற்கான அபிவிருத்தி நிதியை புலிகள் ஊடாக கையாள முற்படினும் கூட, ஏற்கனவே இத்தகைய நடவடிக்கை அரசியல் யாப்பிற்கு விரோதமானது என ஆட்சியாளர்களினாலேயே விவாதிக்கப்பட்டதனால் இதில் முன்னேற்றம் காண்பதென்பது சாத்தியமாகமாட்டாது. ஆகையினால் புலிகளின் அதிகளவான பங்களிப்புடன் என்பது பொதுப்படுத்தி அர்த்தம் கொள்ளத்தக்கதொன்றல்ல.

ஆனால் தற்பொழுதுள்ள முக்கியமான கேள்வி இவ்விரு அமைச்சர்களின் கருத்துக்களால் அரசாங்கத்தின் நிலைப்பாடு எது? இவ்விருவரும் கூற வந்தது என்ன? என்பதே ஆகும். ஏனெனில், ஒன்றிற்கொன்று முரண்பட்டதாக இருப்பதினால் இவ்விரு கருத்துக்களும் அரசாங்கத்தின் நிலைப்பாடாக இருக்க முடியாது. அவ்வாறு இல்லாது இவ்விருவரதும் கருத்துக்களே அரசாங்கத்தின் கருத்தாயின் ஒருபுறம் அரசாங்கம் இன்னமும் பெரும் குழப்பத்தில் உள்ளது, இரட்டைவிதமான பேச்சுக்களைக் கைக்கொள்கிறது என்பதே ஆகும். இதைத்தவிர அமைச்சர் பீரிசும், அமைச்சர் மிலிந்தமொறகொடவின் தனிப்பட்ட கருத்துக்களே இவையாயின் அமைச்சரவை மட்டத்தில் இவ்விடயத்தில் பெரும் கருத்து வேறுபாடு உண்டு என்பது வெளிப்பட்டதாகிறது.

ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் பெரும் நெருக்கடியிலும், குழப்பத்திலும் இருக்கின்றதென்பது வெளிப்படையான ஒன்று. ஒருபுறம் சனாதிபதி சந்திரிகா கொடுத்துவரும் நெருக்கடி, மறுபுறத்தில் சமாதான முயற்சிகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லப்போதிய அளவில் அரசியற் பலமோ, சிந்தனை மாற்றமோ இல்லாதநிலை, இந்நிலையில், டோக்கியோ மாநாட்டில் பெரும் தொகை நிதியைப் பெற்றுக்கொள்ளும் வகையில் உதவி வழங்குவோரைத் திருப்திப்படுத்தும் வகையில் செயற்பட வேண்டியது அவசியம்.

இத்தகையதொரு நிலையிலேயே ஒவ்வொரு சிரேஷ்ட அமைச்சரும் ஒவ்வொருவிதமாகப் பேச வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. விடுதலைப்புலிகளின் பங்களிப்பின்றி சமாதானம் நிலைபெற முடியாது என்பதனால், புலிகளையும் பங்குதாரிகள் ஆக்கிக் கொண்டு புனரமைப்புப் பணிகளில் ஈடுபடுவோம் எனச் சர்வதேச சமூகத்திற்குக் கூறுவதன் மூலம் சமாதானத்தின் மீதான நம்பிக்கையைச் சர்வதேச சமூகத்திற்குக் கொடுத்துப் போதிய நிதியுதவிகளைப் பெற்றுக் கொள்ள அரசாங்கம் முற்படுகின்றது. மறுபுறத்தில், அரசியல் யாப்பிற்குட்பட்ட விதத்திலேயே செலவிடப்படுமெனக் கூறுவதன் மூலம், சிறிலங்காவில் அரசாங்கத்திற்கு எதிரான சக்திகளின் எதிர்க்கூச்சல்களிலிருந்தும் சனாதிபதியின் மிரட்டல்களில் இருந்தும் தன்னைக் காத்துக் கொள்ள முற்படுகின்றது.

ஐ.தே.முன்னணி அரசாங்கத்தைப் பொறுத்து எத்தகைய நிலைப்பாட்டை மேற்கொண்டாயினும், எத்தகைய வாக்குறுதிகளைக் கொடுத்தாயினும் நிதி உதவிகளைப் பெற்றுக் கொள்வதே அதன் நோக்கமாகும். ஏனெனில் இந்நிதியுதவியானது ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தைப் பலப்படுத்துவதற்கு மிகவும் அவசியமானதொன்றாகும். சிறிலங்கா அரசானது விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபட முன்வந்ததே பொருளாதார ரீதியில் சிறிலங்கா சந்தித்த பெரும் நெருக்கடியே காரணம் என்பதும் அனைவருக்கும் தெரிந்ததொன்றே.

இதேவேளை, டோக்கியோ மாநாட்டில் பெறப்படும் கடனானது பெரும் தொகையானதாக இருப்பதன் காரணமாக அரசாங்கத்தின் மீதான பொறுப்பும் அதிகமானதாகவே இருக்கும். அத்தோடு வடக்கு-கிழக்கிற்கான பகுதிகளைப் பயன்படுத்துவதில் விடுதலைப் புலிகளின் பங்களிப்பு ஏற்கனவே கேள்விக்குரியதாகி விட்டதனால், இலங்கைத் தீவிற்கெனப் பெறப்படும் நிதிக்கும் அரசாங்கமே பொறுப்பு ஏற்க வேண்டியதாக இருக்கும்.

# வடக்கில் புதைக்கப்பட்ட நிலக்கண்ணிகளை அகற்ற ஆறு ஆண்டுகள் வேண்டும்

### ஸ்கொட்லாந்து நிபுணர் கருத்து

வடக்கில் புதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகள் மற்றும் நிலக்கண்ணி வெடிகளை அகற்ற ஆறு ஆண்டுகள் தேவைப்படும் என ஸ்கொட்லாந்து நாட்டைச் சேர்ந்த மிதிவெடி அகற்றும் பிரிவின் தொழில்நுட்ப நிபுணர் டீன் தெரிவித்துள்ளார்.

சுமார் ஒரு மில்லியன் வெடிபொருட்கள் அங்கு புதைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டாலும் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையை விட அதிகமான கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

படையினரால் வழங்கப்பட்ட வரைபடங்கள் தெளிவற்றுக் காணப்படுவதால் அவற்றை வைத்துக்கொண்டு கண்ணிவெடிகளை அகற்ற முடியாது என்று ஸ்கொட்லாந்து நாட்டைச் சேர்ந்த கண்ணிவெடி அகற்றும் பிரிவின் தொழில்நுட்ப நிபுணர் டீன் மேலும் தெரிவித்துள்ளார்.

# வட - கிழக்கு கல்விக் கல்லூரி ஆசிரியர்கள் தமது பகுதிகளில் கடமையாற்ற அனுமதி

### கல்வியமைச்சர் உறுதிமொழி

அண்மையில் கல்விக் கல்லூரிகளிலிருந்து வெளியேறிய வடக்கு-கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 168 ஆசிரியர்கள் தாம் விரும்பினால் அவர்களது பகுதியிலேயே கடமையாற்ற அனுமதிக்கப்படுவர் என சிறிலங்காவின் கல்வி அமைச்சர் கலாநிதி கருணாசேன கொடித்துவக்குத் தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் மற்றும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஆகியவற்றைச் சந்தித்த போதே அமைச்சர் இந்த உறுதிமொழியை வழங்கினார்.

இவ் ஆசிரியர்கள் வெளிமாகாணங்களுக்கு நியமிக்கப்பட்டிருந்ததை தமிழர் ஆசிரியர் சங்கமும், தமிழர் கூட்டமைப்பும் ஆட்சேபித்திருந்தன.

வடகிழக்கில் 6000 ஆசிரியர்களுக்குத் தட்டுப்பாடு, வெற்றிடங்கள் நிலவுகின்ற போதும் வட - கிழக்கைச் சேர்ந்த ஆசிரியர்களை வெளிமாவட்டங்களுக்கு நியமித்தது பாரபட்சமாகும் என்றும் இவர்கள் சுட்டிக்காட்டினர்.

மேற்படி ஆசிரியர்கள் அனைவரையும் வட-கிழக்கிற்கு இடமாற்ற வேண்டும் என அமைச்சரிடம் கேட்கப்பட்டபோது அதற்கமைய அவ் ஆசிரியர்கள் விரும்புகின்றபட்சத்தில் அவர்களை இடமாற்ற அனுமதியும் அங்கீகாரமும் வழங்குவதாக அமைச்சர் உறுதியளித்தார்

## முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டு நிகழ்வு

திருவையாறு பரமேஸ்வரா முன்பள்ளி மாணவர்களுடைய விளையாட்டு நிகழ்வு கடந்த புதனன்று பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெற்றது.

மங்கல விளக்கினை வட்டக்கச்சி வலயப்பொறுப்பாளர், மாவீரரின் பெற்றோர் ஆகியோர் ஏற்றிவைத்தனர். அதனைத் தொடர்ந்து தேசியக் கொடியினை திருவையாறு வலயப்பொறுப்பாளர் ரமேஸ் ஏற்றினார். அகவணக்கத்துடன் முன்பள்ளிக் கொடியினை முன்பள்ளி ஆசிரியர் தவப்பிரகாசம் டிஸ்ரெல்லாவும், நிறுவனக் கொடியினை முன்பள்ளி இணைப்பாளர் ஸ்ரீரஞ்சினியும் ஏற்றி வைத்தனர். கல்வி மேம்பாட்டு நிலையக் கொடியினை செல்வி நிலா ஏற்றிவைத்தார். வரவேற்புரையை திருவையாறு மகாவித்தியாலய மாணவி செல்வி. தர்மினி வழங்கியதும் சிறார்களின் ஒலிம்பிக் தீபம் ஏற்றலுடன் விளையாட்டு ஆரம்பமாகியது. முன்பள்ளி ஆசிரியர்களின் நெறிப்படுத்தலில் சிறார்களின் விளையாட்டுக்களும் உடல் அசைவு, வினோத உடை, பெற்றார் நிகழ்வு, உத்தியோகத்தர் நிகழ்வு என நடைபெற்று நன்றியுரையுடன் நிறைவுபெற்றது.

# அரசாங்க அலுவலகங்களில் தமிழ் மொழியில் கடமையாற்ற இதுவரை நடவடிக்கை இல்லை

### 15 வருடங்கள் இதே நிலையென்கிறார் டி.யு.குணசேகர

(கொழும்பு)

"அரசாங்கம் தமிழ் சிங்கள மொழிகளை அரசகரும மொழிகளாகப் பிரகடனம் செய்து 15 வருடங்கள் கடந்துள்ள போதிலும், அரச அலுவலகங்களில் தமிழ் மொழியில் கடமைகளை மேற்கொள்வதற்கு இதுவரை வசதிகள் செய்யப்படவில்லை"

இவ்வாறு உத்தியோக மொழி ஆணைக்குழுத் தலைவர் டி.யூ.குணசேகர தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளியன்று இராஜகிரியவில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். அவர் மேலும் கூறுகையில்; அரசகரும மொழியாக தமிழ்மொழி உள்ள போதும் அரச அலுவலகங்களில் இன்னும் தமிழ்மொழியில் பணிகள் இடம் பெறுவதில்லை. தமிழ்மொழி தெரிந்த ஊழியர்கள் பற்றாக்குறை, அரசகரும மொழிக்கொள்கை உரிய முறையில் அமுல் செய்யப்படாமை போன்றவையே இந்நிலைக்குக் காரணமாகும் என்று கூறியுள்ளார்.

### மாகாண உடற்பயிற்சிப் போட்டியில்-

## தேசிய மட்டத்திற்கு தெரிவான பாடசாலைகள்

வடக்கு கிழக்கு மாகாண உடற்பயிற்சிப் போட்டிகள் நேற்று முன்தினம் திருகோணமலையில் நடைபெற்றுள்ளன.

24 பாடசாலைகள் கலந்து கொண்ட இப்போட்டியில் ஆண்கள் பிரிவில் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயமும் பெண்கள் பிரிவில் இரம்பைக்குளம் மகளிர் வித்தியாலயமும் சம்பியனாகின. அதேநேரம் ஆண்கள் பிரிவில் இரண்டாம் மூன்றாம் இடங்களை முல்லைத்தீவு மாவட்ட கொக்கிளாய் அ.த.க பாடசாலை, மட்டக்களப்பு இந்துக்கல்லூரி என்பனவும் பெண்கள்பிரிவில் இரண்டாம் இடத்தை கிளி. இராமநாதபுரம் அ.த.க. பாடசாலையும் மூன்றாவது இடத்தை யாழ். உடுவில் மகளிர் கல்லூரியும் பெற்றுக்கொண்டன. மேற்படி பாடசாலைகள் தேசிய ரீதியிலான போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உபுல் சந்தனவின் சிறப்பான ஆட்டத்தால் சிறிலங்கா 4 விக்கெட்டுக்களால் வெற்றி

### -தொடரையும் கைப்பற்றியது

மேற்கிந்தியத் தீவுகள் சிறிலங்கா அணிகளுக்கிடையில் பாபடோசில் டியூஸ்ரன் ஓவல் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இரண்டாவது ஒரு நாள் சர்வதேச போட்டியில் சிறிலங்கா அணி நான்கு விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது.

இதன்படி மூன்று போட்டிகள் கொண்ட ஒரு நாள் போட்டித் தொடரில் கடைசிப் போட்டி நடைபெறுவதற்கு முன்னரே 2 - 0 என்ற போட்டிக் கணக்கில் சிறிலங்கா அணி தொடரைக் கைப்பற்றியுள்ளது.

முதலில் ஆடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 4 விக்கெட் இழப்பிற்கு 312 ஓட்டங்களைப் பெற்றது.


இதில் அணித்தலைவர் லாறா 106 பந்துகளை சந்தித்து எட்டுப் பவுண்டரிகள், 2 சிக்ஸ்சர்கள் அடங்கலாக 116 ஓட்டங்களையும், ஹெய்ன்ஸ் 94 ஓட்டங்களையும், மார்லன் சாமுவேல் 56 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் வாஸ் 33 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும், நிசங்க 67 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 313 என்ற பெரிய ஓட்ட இலக்கை நோக்கி ஆடத்தொடங்கிய சிறிலங்கா 49.3 பந்துகளில் 6 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இதில் உபுல் சந்தன மிகச் சிறப்பாக துடுப்பெடுத்தாடி 71 பந்துகளில் 6 பவுண்டரிகள், 4 சிக்ஸ்சர்கள் அடங்கலாக 89 ஓட்டங்களைப் பெற்று வெற்றிக்கு உறுதுணையானார். மேலும் மாவன் அத்தபத்து 47 ஓட்டங்களையும், ஜெயசூரிய 41 ஓட்டங்களையும், களுவிதாரன 37 ஓட்டங்களையும் பெற்றனர்.



# நேற்று கிளிநொச்சியில் நடைபெற்ற திருவள்ளுவர் மாநாட்டில்...




# பொ.ஐ.மு.-ஜே.வி.பி. இடையில் சில முக்கிய விடயங்களில் இழுபறி

## இறுதித் தீர்வு எட்டப்படுவதில் சிக்கல்

(கொழும்பு)

ஜே.வி.பி. - சு.க.கூட்டணி அமைப்பது தொடர்பான இறுதி முடிவு இதுவரை எடுக்கப்பட வில்லை என்று ஜே.வி.பி.யின் பிரச்சார செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

மேற்படி இரு கட்சிகளுக்கு மிடையிலான கூட்டணி குறித்து நேற்று பேச்சுக்கள் இடம்பெற்றன. இப் பேச்சுக்கள் இன்றும் நடைபெறவுள்ளது.

பல்வேறு விடயங்களில் ஜே.வி. பி.க்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் இணக்கம் காணப்பட்டுள்ளது. எனினும் சில குறிப்பிட்ட விடயங்களில் இணக்கம் காணப்பட வேண்டியிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இரு கட்சிகளுக்கும் இடையிலான கூட்டணி உடனடியாக அமைக்கப்பட வாய்ப்பில்லையென்று பொதுசன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டி.எம். ஜெயரட்ண தெரிவித்துள்ளார்.

தேசிய பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாகவும் கூட்டணியின் சின்னம் தொடர்பாகவும், இரண்டு கட்சிகளுக்குள்ளும் இன்னும் கருத்து வேறுபாடுகள் நிலவுவதாகவும் அவர் கூறினார்.

## 'விழி' மருத்துவ மாத இதழ் வெளிவந்துள்ளது

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி சுகாதார வைத்திய பணிமனையினரால் வெளியிடப்பட்டு வரும் 2003 ஜூன் மாத மருத்துவ இதழ் (விழி) இதழ் 33 வெளிவந்துள்ளது.

எச், ஐ, வீ.க்குப்பின்னர் உலகை அச்சுறுத்தும் சார்ஸ் வைரஸ் (SARS) என்னும் தலைப்புச் செய்தியுடனும், 'கொடிய கொலரா' வருமுன் காப்போம், முழங்கால் நோ, களைகொல்லி தற்கொலைக்கு முக்கிய காரணியாகும், மனிதனுக்கு அச்சுறுத்தலாக இருக்கும் விலங்கு நோய்கள் மற்றும் பல சுகாதாரச் செய்திகளுடன் இதழ் 33 விழி மருத்துவ இதழ் வெளி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## சாவு அறிவித்தல்

### திருமதி தங்கம்மா வேலுப்பிள்ளை

அனலைதீவைப் பிறப்பிடமாகவும், தற்போது கிளிநொச்சி உருத்திரபுரத்தை வதிவிடமாகவும் கொண்டவருமான திருமதி தங்கம்மா வேலுப்பிள்ளை அவர்கள் 05-06-2003 அன்று இந்தியாவில் காலமானார். இவர் காலஞ்சென்ற சுப்பிரமணியம் வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கணவதிப்பிள்ளை செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மகளும், சுப்பிரமணியம் சின்னாச்சி தம்பதிகளின் அருமை மருமகளும், விசாலாட்சி, சீவரத்தினம், அமரர் யோகம்மா, லெட்சுமி, அமரர் நடராசா, தில்லையம்பலம், சண்முகம் (சரவணை) ஆகியோரின் அன்புச் சகோதரியும், தருமலிங்கம் (சுவாமிநாதன்), நவரத்தினம், அருளானந்தம், சுப்பிரமணியம், ஐயம்பெருமாள், விமலாதேவி, அமரர்நடேசபிள்ளை, பரமேஸ்வரி, சாரதா, குமணன் ஆகியோரின் அன்புத் தாயாரும், வள்ளியம்மை, சபாரத்தினம், விமலராணி, செல்லம்மா, தனலெட்சுமி, பாலச்சந்திரன், கலாரஞ்சினி, குமாரசாமி, குணரத்தினம், கலாநிதி ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவனேஸ்வரி, மலர்மதி, சசிகலா, கிருஸ்ணலீலா, மோகனா, சிபாசினி, அரிகரன், சிவராணி, ரேணுகா, பங்கையற்செல்வி, சிவசொருபா, ரேவதி, அருள்மாறன், அருள்வாணி, கார்த்திகா, உசன், தீபா, உதயா, சேசிகா, தயாளன், கோமகள், ஐயந்தி, நிர்மலன், அமரர் காஞ்சனா, பவானி, கலைச்செல்வி, சுபாசினி, பிரியதர்சினி, பரமேஸ்வரன், மேனகா, கௌசல்யா, கார்த்திகாயினி, நளாயினி, விஸ்னு, கோபிகா, அநுசியா, உதயணன், ரஜீவன், குருபரன், பவித்திரா, மயூரன் ஆகியோரின் அன்புப் பேத்தியும், நிமலன், கீரன், மயூரன், சரிகா, ஆரணி, வருண், அஞ்சனா, மீரா, சித்தாத், துசானி, ஆதிகா, சர்வதன், சிந்துசா, காயத்திரி, கோகுலன், அபிராமி, தர்மிகா, விஸ்ணுகா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 11-06-2003 நாளை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக கிளிநொச்சி உருத்திரபுரம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
**வே. ஐயம்பெருமாள** (மகன்),
பிரதேச முகாமையாளர் (வன்னி),
இலங்கை வங்கி.

(3353)

## மாகாண மட்ட அணிநடைப் போட்டி கொக்கிளாய் அ.த.க.பா. முதலிடம்!



வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி[illegible]கள

திருகோணமலையில் நடைபெற்ற வடக்கு-கிழக்கு மாகாண உடற்பயிற்சிப் போட்டியில் ஆண்களுக்கான பிரிவில் ஆனைக்கோட்டை சுப்பிரமணியம் வித்தியாலயமும், பெண்கள் பிரிவில் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியும் முதலிடம் பெற்றன.

பெண்கள், ஆண்களுக்கான அணி நடைப் போட்டியில் திருகோணமலை மெதடிஸ்ற் பெண்கள் கல்லூரியும், முல்லைத்தீவு கொக்கிளாய் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையும் முதலிடம் பெற்றுள்ளன.

நேற்று முன்தினம் நடைபெற்ற இப் போட்டிகளில் 23 பாடசாலைகளைச் சேர்ந்த 500க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றனர் என திருகோணமலை விளையாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர்.

## கண்டெடுப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி நகரப் பகுதியிலிருந்து தவராஜா தமிழினி, ஸ்கந்தபுரம் இல. 858171482V என்னும் தே.அ.அட்டை கண்டெடுக்கப்பட்டு கிளிநொச்சி ஈழ நாதம் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளவும். (சோ)

## வடக்கு....

செயற்படுவர். சமஷ்டி அமைப்பு ஒன்றின் கீழ் பிரச்சினைக்கான இறுதித் தீர்வைக் காணும் நோக்குடன் சமாதானப் பேச்சுக்கள் தொடரப்படும்.

சர்வதேச சமூகத்தின் மூலம் கிடைக்கும் வளங்கள் வட-கிழக்கு மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு அரசிற்கு வலுவைக் கொடுக்கும். இந்நிதியை புலிகளுடன் இணைந்து பயன்படுத்த அரசு விரும்புகின்றது.

சமஷ்டி அமைப்பின் மூலம் தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை வழங்கும் தீர்வு ஒன்று குறித்தும், ஒஸ்லோவில் இரு தரப்பிற்கிடையே உடன்பாடு காணப்பட்டுள்ளது. வட-கிழக்கில் நிர்வாக அமைப்பு ஒன்றை ஏற்படுத்துவது அவசியம். இதற்கென நான்கு அடிப்படை அம்சங்கள் கொண்ட புதிய அமைப்பு உருவாக்கப்படும்.

வடக்கு - கிழக்கு மாகாண நிர்வாக கட்டமைப்பிற்கு வடக்கு - கிழக்கிற்கான புனர்வாழ்வு, புனர் நிர்மாணம், அபிவிருத்தி போன்ற விடயங்களால் அதிகாரங்கள் இருக்கும். விடுதலைப் புலிகளுக்கும் அதிகளவு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். அதேவேளை, எல்லா சமூகத்தையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற வர்கள் அதில் உள்வாங்கப்பட வேண்டும்.

நாட்டின் சட்ட பிரமாணங்களுக்கு குந்தகம் ஏற்படாதபடி கணிசமான பங்கை இந்நிர்வாகத்தில் புலிகள் வகிப்பதற்கு இடமளிக்கப்படும் என அவர் தனது உரையில் மேலும் கூறியுள்ளார்.

## சமாதான.....

டோக்கியோ நகரத்திலுள்ள அகாசகா பிறின்ஸ் ஹோட்டலில் ஆரம்பமானது. இந்த மாநாட்டின் ஆரம்ப உரையை ஜப்பான் பிரதமர் ஆற்றினார்.

நேற்றைய மாநாட்டில் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவரும், 290 மில்லியன் டொலர்களை வழங்குவதாக ஐரோப்பிய ஒன்றியத்துக்கான பேச்சாளரும், 54 மில்லியன் டொலர்களை வழங்குவதாக அமெரிக்காவின் பிரதி இராஜாங்க அமைச்சரும் அறிவித்துள்ளனர். சமாதான முயற்சிகளின் முன்னேற்றத்தைப் பொறுத்தே இவ் உதவிகள் வழங்கப்படுமென ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவித்துள்ளது.

இந்த மாநாட்டில் அமெரிக்கா, பிரித்தானியா, அவுஸ்திரேலியா, இந்தியா, பாகிஸ்தான் உட்பட 50 நாடுகளும், ஆசிய அபிவிருத்தி வங்கி, ஆசிய கைத்தொழில் அமைப்பு, ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் உணவு விவசாய அமைப்பு, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், சர்வதேச விவசாய அபிவிருத்திக்கான நிதியம், சர்வதேச ஊழியர் அமைப்பு, உலக சுகாதார நிறுவனங்கள், உலக உணவுத் திட்டம், உலக வங்கி உட்பட 22 சர்வதேச அமைப்புக்கள் கலந்து கொண்டுள்ளன.

இந்த மாநாட்டில் விடுதலைப் புலிகள் பங்கேற்காமையால் நோர்வேயின் சார்பில் முக்கிய அமைச்சர்களோ, பிரதி அமைச்சர்களோ இதில் கலந்து கொள்ளவில்லை. எனினும் நோர்வேத் வெளிவிவகார அமைச்சின் செயலாளர், இலங்கைக்கான நோர்வே தூதுவர், ஜப்பானுக்கான நோர்வேத் தூதுவர் உட்பட நோர்வேயின் சார்பில் ஒன்பது பேர் டோக்கியோ மாநாட்டில் கலந்து கொண்டனர். சிறிலங்கா அரசின் சார்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அமைச்சர்கள் கே. என்.சொக்ஸி, ஜீ.எல்.பீரிஸ், ரவூப் ஹக்கீம், மிலிந்த மொறகொட மற்றும் பிரதமரின் ஆலோசகர் செயலாளர் பிரட்மன் வீரக்கோன், பிரதமரின் ஆர்.பாஸ்கரலிங்கம், திறைசேரியின் செயலாளர் சரித்த ரத்வத்த, சட்டமா அதிபர் கே.சி. கமலசபேசன் உட்பட 37 பிரதிநிதிகள் கலந்து கொண்டுள்ளனர்.

## சமஷ்டி....

நாங்கள் உணர்ந்து கொள்கின்றோம்.

இந்த சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்ட போதிருந்த சமஷ்டி முறைத் தீர்விலான அடிப்படையை நோக்கி இந்தப் பேச்சுவார்த்தை நகர வேண்டும்.

சர்வதேச அங்கீகாரத்தைப்பெற விடுதலைப்புலிகள் மேலும் பல நடவடிக்கைகளைஎடுக்க வேண்டும். இந்த அங்கீகாரத்தைப்பெற விடுதலைப்புலிகள் என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று அமெரிக்கா பரிந்துரைக்க தயாராக இருக்கிறது.

விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளவேண்டும் என்று தனிப்பட்ட முறையில் நான் அவர்களைக் கோருகின்றேன் என்றும் அப்போது கூறினார்.

விடுதலைப்புலிகள் குறித்து நோர்வே ஒஸ்லோ மாநாட்டில் இருந்த தொனியைவிட அமெரிக்காவின் தொனி நேற்று கீழிறங்கிக் காணப்பட்டதாக அவதானிகள் தெரிவித்தனர்.

## பண்பாட்டு.....

கல்விக் கழகப் பொறுப்பாளர் வே. இளங்குமரன் ஏற்றி வைத்தார். தமிழ்ச் சங்கக் கொடியினை மருத்துவர் முருகானந்தன் ஏற்றி வைத்தார். அதனைத் தொடர்ந்து மேடை நிகழ்வுகள் ஆரம்பமாயின.

மேடை நிகழ்வில் திருவள்ளுவருக்கான திருவிளக்கை முனைவர் அ. சண்முகதாஸ் ஏற்றினார். வரவேற்புரையைத் தொடர்ந்து ந. கோபாலமூர்த்தி பழகும் மனிதப் பண்பாடு என்ற தலைப்பிலும் முனைவர் அ. சண்முகதாஸ் மன்னுயிரெல்லாம் தொழும் என்ற தலைப்பிலும் சிறப்புச் சொற்பொழிவாற்றினர். அடுத்து கிளி. அரச அதிபர் தி. இராசநாயகம் விருந்தினர் உரையை நிகழ்த்தினார்.

அதனைத் தொடர்ந்து திருக்குறள் மாநாட்டை முன்னிட்டு பாடசாலை ரீதியாக நடத்தப்பட்ட திருக்குறள் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

இறுதியாக கவியரங்கம், நாடகம், இசைப் பாடல்கள், நடனம் என பல கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

மேற்படி நிகழ்வுகளில் ஏராளமான மாணவர்கள், ஆசிரியர்கள், தமிழ்த்துறை சார்ந்தவர்கள், பொதுமக்கள் என ஏராளமானவர்கள் கலந்து சிறப்பித்தனர். (லோ)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஜூன் மாதம் 10ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.